ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஆற்றிலிருந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆற்றிலிருந்து ॥

அயலகத்தார் முறைப்பாடு

‡ஆற்றில் இருந்து⋆ விளையாடுவோங்களை⋆
சேற்றால் எறிந்து⋆ வளை துகில் கைக் கொண்டு⋆
காற்றின் கடியனாய்⋆ ஓடி அகம் புக்கு⋆
மாற்றமும் தாரானால் இன்று முற்றும்⋆
வளைத் திறம் பேசானால் இன்று முற்றும் (1)

குண்டலம் தாழக்⋆ குழல் தாழ நாண் தாழ⋆
எண் திசையோரும்⋆ இறைஞ்சித் தொழுதேத்த⋆
வண்டமர் பூங்குழலார்⋆ துகில் கைக் கொண்டு⋆
விண் தோய் மரத்தானால் இன்று முற்றும்⋆
வேண்டவும் தாரானால் இன்று முற்றும் (2)

தடம் படு தாமரைப்⋆ பொய்கை கலக்கி⋆
விடம் படு நாகத்தை⋆ வால் பற்றி ஈர்த்து⋆
படம் படு பைந்தலை⋆ மேல் எழப் பாய்ந்திட்டு⋆
உடம்பை அசைத்தானால் இன்று முற்றும்⋆
உச்சியில் நின்றானால் இன்று முற்றும் (3)

தேனுகன் ஆவி செகுத்துப்⋆ பனங்கனி⋆
தான் எறிந்திட்ட⋆ தடம் பெரும் தோளினால்⋆
வானவர் கோன் விட⋆ வந்த மழை தடுத்து⋆
ஆனிரை காத்தானால் இன்று முற்றும்⋆
அவை உய்யக் கொண்டானால் இன்று முற்றும் (4)

ஆய்ச்சியர் சேரி⋆ அளை தயிர் பால் உண்டு⋆
பேர்த்தவர் கண்டு பிடிக்கப்⋆ பிடியுண்டு⋆
வேய்த் தடந் தோளினார்⋆ வெண்ணெய் கொள் மாட்டாது⋆ அங்-
காப்புண்டிருந்தானால் இன்று முற்றும்⋆
அடியுண்டழுதானால் இன்று முற்றும் (5)

www.prapatti.com

தள்ளித் தளர் நடை யிட்டு⋆ இளம் பிள்ளையாய்⋆
உள்ளத்தின் உள்ளே⋆ அவளை உற நோக்கி⋆
கள்ளத்தினால் வந்த⋆ பேய்ச்சி முலை உயிர்⋆
துள்ளச் சுவைத்தானால் இன்று முற்றும்⋆
துவக்கற உண்டானால் இன்று முற்றும் (6)

மாவலி வேள்வியில்⋆ மாண் உருவாய்ச் சென்று⋆
மூவடி தா என்று⋆ இரந்த இம் மண்ணினை⋆
ஓரடி இட்டு⋆ இரண்டாம் அடி தன்னிலே⋆
தாவடி இட்டானால் இன்று முற்றும்⋆
தரணி அளந்தானால் இன்று முற்றும் (7)

தாழை தண் ஆம்பல்⋆ தடம் பெரும் பொய்கைவாய்⋆
வாழு முதலை⋆ வலைப்பட்டு வாதிப்புண்⋆
வேழம் துயர் கெட⋆ விண்ணோர் பெருமானாய்⋆
ஆழி பணி கொண்டானால் இன்று முற்றும்⋆
அதற்கருள் செய்தானால் இன்று முற்றும் (8)

வானத்தெழுந்த⋆ மழை முகில் போல்⋆ எங்கும்
கானத்து மேய்ந்து⋆ களித்து விளையாடி⋆
ஏனத்துருவாய்⋆ இடந்த இம் மண்ணினை⋆
தானத்தே வைத்தானால் இன்று முற்றும்
தரணி இடந்தானால் இன்று முற்றும் (9)

‡அங்கமலக் கண்ணன் தன்னை⋆ அசோதைக்கு⋆
மங்கை நல்லார்கள் தாம்⋆ வந்து முறைப்பட்ட⋆
அங்கவர் சொல்லைப்⋆ புதுவை கோன் பட்டன் சொல்⋆
இங்கிவை வல்லவர்க்கு⋆ ஏதம் ஒன்றில்லையே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com